# அரசு செய்தி வெளியீடு – 19.1.2009

எண் – 35

**

21-1-2009 தேதியிட்ட "குமுதம்" வார இதழில் கோவை மாவட்டம் சரவணம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள சங்கரா இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி நிறுவனத்தில் முதலாண்டு பட்டயப் படிப்பு பயின்று வரும் செல்வி ஷோபனா என்பவர் தனது குடும்பத்தின் வறுமை நிலை குறித்தும், பொம்மை விற்றுத் தான் பிழைப்பு நடத்துவதாகவும், தந்தையார் இதய நோயினால் இறந்து விட்டதாகவும், இவருக்கும் இதய நோய் உள்ளதாகவும் அளித்த பேட்டியினை வெளியிட்டிருந்தது. அதனைப் படித்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்னாரின் படிப்புதவிக்காக முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்ச ரூபாய் வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளார்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9